செய்தி வெளியீடு எண்:707 நாள் :28.12.2013

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சென்னை தீவுத்திடலில் 40வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் வர்த்தக பொருட்காட்சி 2014 நடத்த அரசு அனுமதி அளித்துள்ளது.

இதன் தொடர்பாக திரு.ஹேமன்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப., முதன்மைச் செயலர்/நிர்வாக இயக்குனர் அவர்கள் தலைமையில் இன்று 27.12.2013 தீவுத்திடலில் அனைத்து மத்திய மாநில அரசுத்துறை அரங்கங்கள் அமைக்கவும், பொருட்காட்சி துவக்கம் குறித்தும் மத்திய மாநில அரசு அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார். இது, பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு குறித்து காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறை அதிகாரிகளிடம் பெற வேண்டிய பாதுகாப்பு குறித்து சான்றுகள், நடவடிக்கை எடுக்கத்தகுந்த ஆலோசனை வழங்கினார்.

இதில் 42 மத்திய மாநில அரசுத்துறையினர் வரும் 31.12.2013 அன்று அரசு அரங்கங்கள் அனைத்தும் முடிவடையும் என்று உறுதியளித்துள்ளனர். இதன் பேரில் நிர்வாக இயக்குனர் அவர்கள் வரும் ஜனவரி முதல் வாரத்தில், 40வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் வர்த்தக பொருட்காட்சி 2014 துவங்க திட்டமிட்டுள்ளார் மற்றும் அனைத்து அரசு அரங்கிலும் நவீன தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கங்கள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் பொதுமக்கள் பார்வைக்கு முழு அளவில் வைக்க அனைத்து துறை அதிகாரிகளையும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பொருட்காட்சி திடலில் மக்கள் திரளும் முக்கிய இடங்களில் கண்காணிப்பு கேமரா அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

இதில், திரு ஸ்ரீதர், இ.கா.ப., காவல் துறை இணை ஆணையர் அவர்கள் மற்றும் திரு எஸ். கேபிரியல், மாவட்ட வருவாய் அதிகாரி மற்றும் பொதுமேலாளர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரு பிரபாகரன், பொதுமேலாளர் (நிதி) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மற்றும் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

MD TTDC

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**